உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீவாகீசதேவாயநம:

# ஷாக்தவாதவித்வம்சநி.

இஃது,

புதுவைச் சிவசமாசச் சபையாரில்

ஒருவராகிய

ம-ள-ள-ஸ்ரீ

அ. சிவநேசபிள்ளையவர்களால்


இயற்றப்பட்டு

சென்னை

கல்விவிளக்க அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

யுவ௵ — மாசிமீ.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீவாகீசதேவாய நம:

# மூர்க்கவாதவித்வம்சநி.

காப்பு.

அஞ்சக்கரத்தொரு விஞைசக்கவிடரிணைக்
கஞ்சத்திருவடி நெஞ்சிற்பொருத்துவாம்.

சுத்தசைவ சம்பிரதாயங்களைத் தழுவிப் பேசவல்ல புராணிகரென்று தெரியும் பொ. சுந்தரம்பிள்ளை அவர்களே நீர் மிகவும் அருமை அருமையாக இயற்றி அப்பர்சுவாமிகள் முத்திநெறி விளக்கமென்று பெயரிட்டு சென்ற மார்கழியீ (௨௯) யில் வெளியிட்ட சிறியபத்திரிகையொன்றில் நான்பெரியபுராணம் சொல்லிவருகிறேன், அதில் சேக்கிழார்சுவாமிகள் சொல்லாமல் விட்டுவிட்ட விதியொன்றுண்டு, அதுசிவபெருமான் சிங்கவுருக்கொண்டு திருநாவுக்கரசுசுவாமிகளை விழுங்கி ஐக்கியஞ்செய்துகொண்ட வுண்மையே. அதற்குச்சா

ட்சி அப்பர்சுவாமிகளாகூறிய தேவாரத்தில் "சிங்கமேபுன்னடிக்கே போதுகின்றேன்,,—என்று காணப்படுகாட்சியே யென்றுகூறி, அப்பாடலையும்,சிங்கமுகஜககிய அறிகுறிபிம்பத்தையும், அப்பர்சுவாமிகள் முத்தியடைந்ததிருப்புகலூர் ஆலயத்துள் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும்,அத்தலபுராணமும் அங்ஙனமே கூறுகிறதென்றும், அதனையாவருக்குமவிளங்கப்பேசுவேனென்றும் வெளிப்பட்ட நமதுமடமையைநோக்கி யாம அதிகவியப்படைந்தனம.

ஏ போலிப்புலவரே! இச்சிங்கவிஷத்தைச் சென்னையில் பிரஸதாபித்து நீரபட்டபாட்டைமறந்து உங்கேசிரிப்புண்டதுபோதாமல இவவிடத்துஞ சிரிக்கவுடமபெடுகிறீர். இன்னு மெங்கெங்கே சிரிப்பாருண்டுபோக விருக்கினறீரோ அறியேம. "நல்லமாட்டுக்கு ஒரடியும், நல்லமனிதனுக்கு ஓர்சொல்லும்,, எனபது உமமிடத்துப பொயததுபபோய்விட்டது. நீர அதைமறுககஅவதரித்த அவதார புருஷரோனும. சென்னையிற்கூடிய பெருஞ்சபையில் சென்றுவிவகரிக்கவகையின்றிப பதுஙகிக்கிடந்த நீர் மஹா வித்வ சிரோமணியைப்போல எண்டு விவகரிப்பேனென்று வெளிப்பட்டதுஆச்சரியம்! ஆச்சரியம!!

நீர் சேக்கிழார்சுவாமிகள் அருளிச்செய்த பெரியபுராணத்தை அதிக சிரத்தையோடு பிரசிஙகிப்பவரபோல நடித்து அதனால் வயிறுவளர்த்துவருதலையுமமறந்து சைவிக புராணமாகிய அதனுண்மையை விசாரித்துணராமல் அதிற்கூறப்படாத சிங்கவிஷயத்தைக்கற்பித்துஊரொங்குந்திரிந்துகுமுறிவழிந்து நீரகெட்டதுமன்றி யாவரையுங கெடுக்கததலைபபட்டது பாவம்! பாவம்!! பெரியபுராணஞ் செய்தருளி

ய சேக்கிழார்சுவாமிகள் சரித்திரமாகிய சேக்கிழார்புராண
ஞ்செய்தருளினவர்கொற்றவன்குடிஉமாபதிசிவாசாரியார். அவ
ரோ, தில்லைவாழந்தணருளொருவர். சபாநாயகர்விடுத்தருளிய
"அடியார்க்கெளியன்,,—என்னுந்திருமுகத்தைப்பெற்றுக்கொ
ண்டுபெற்றான் சாம்பனுக்கு உடனே முத்திகொடுத்தருளின
வர். அப்பெற்றான் சாம்பனுடைய மனைவியும், அரசன் முத
லாயினோருங்காண அதன் உண்மையை வெளிப்படுத்தி அவர்
கள் சந்தேகத்தை யொழிக்கும் பொருட்டுமுள்ளிச்செடிக்கும்
முத்திகொடுத்தருளினவர். இந்தமூர்த்திகள் செய்தருளியபுரா
ணசாரத்தாலுங் காணப்படாதசிங்கத்தைநீர் கண்டுபிடித்தது
அருமை! அருமை!

இதுநிற்க, சேக்கிழார்சுவாமிகள் செய்தருளிய பெரிய
புராணமோவெனின், "உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்,,
என்று சபாநாயகர் அடியெடுத்துக்கொடுக்கப் பாடியருளியது.
அன்றியும், புராணமுடிந்தபின்பு சோழமகாராஜனுக்கு "நாம்
அடியெடுத்துக்கொடுக்கச் சேக்கிழான் நம்முடையதொண்டர்
களது அடிமைத்திறத்தை விரித்துப்புராணம்பாடிமுடித்
தான். நீ அதைக்கேள்,, என்றுசிவபெருமான் அருளிச்செய்தபா
க்கியத்தைப் பெற்றுடையது. இன்னும், பன்னிருதிருமுறை
களுள்ளேகூட்டிப் பன்னிரண்டாந் திருமுறையென வகுக்கப்
பட்டது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்
லாண்டு என்பவற்றோடுபெரியபுராணஞ்சேர்ந்தே அருட்பாக்க
ளென்றாகிச் சைவத்துக்கும், சிவபூசைக்கும், சிவாலய நித்திய
நைமித்திகங்களுக்கும், சிவதரிசனத்துக்கும், அடியவர்பூசைக்
கும், நியம மந்திரங்களாயின. இத்துணைச் சிறப்பினதாகிய
பெரியபுராணத்தில்சொல்லாமல் விட்டுவிட்டவிதுபொன்றுமா

தென்றுநீர்புலம்பவந்தது சாத்திரவிதியா? சம்பிரதாயவிதியா? அல்லது உமது தலைவிதியா? ஐயோபாவம்! சாத்திரவிதியெனப்பீராயின், சர்வஞ்ஞராகிய சிவபெருமானுடைய திருவாக்காகிய சிவரகசியமும், அவரருள்வழிப்பட்ட இருடிகளாகிய உபமன்யுமகாமுனிவர், அகத்தியமகாமுனிவர்களுடைய திருவாக்குகளாகிய உபமன்யுபக்தவிலாசம், அகஸ்தியபக்தவிலாசங்களும், திருத்தொண்டர் புராணசாரமும், திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் வேதமுதலிய கலைகளெல்லாவற்றையும் திருவுளமிரங்கி ஓதுவிக்க ஓதியநம்பியாண்டார் நம்பிதிருவாக்காகிய திருத்தொண்டர் திருவந்தாதியும் ஒருங்கேயோதது, திருநாவுக்கரசுசுவாமிகள் சிவபெருமானுடைய திருவடியையடைந்தாரென்று சேக்கிழார்சுவாமிகள் கூறியவாறே கூறுமாறால் சாத்திரவிதியென்பது கூடாது. சம்பிரதாயவிதியெனப்பீராயின், திருவாவடுதுறைமுதலிய ஆதீனங்களில் வழங்கிவருதல்வேண்டும். அங்ஙனமின்மையின், சம்பிரதாயவிதியென்பதுகூடாது. ஆகவே, உமது தலைவிதியென்பதே சித்தம். ஆயின், "நஞ்சுண்டசாவாமூவாச்சிங்கமே,,—என்னும் பிரமாணமுண்டேயெனப்பீராயின், அதனுண்மைப்பொருள் அருணந்திப்பிரபாவகரத்தில் விளக்கிக்காட்டிய நியாயப்படி. மேலோரையடுத்துணராதவழி நீமீண்டுமீண்டும் அதனையெடுத்தாளவது நும்மடமையாகவே முடிந்தது. அதற்குநீகூறவந்த சிங்கப்பொருளைக் கொள்வாமெனின், பாடநாசத்திருப்பதிகத்தில "புறம்பயத்தெம்முத்தினைப்புகலூரிலங்குபொன்னினை, உறங்கையோங்கு சிராப்பள்ளி யுலகவிளக்கு ஞாயிறை, கறங்குமருவிக்கழுக்குன்றிற் காண்பார்காணுங்கண்ணானை, அறங்கூழ்அதிகைவீரட்டத் தரிமானேற்றையடைந்தேனே,, — என்றும். "எழிலாரிராஜசிங்கத்தை யிராமேச்சரத்தெம்மெழிலேறு

றை, சூழலார்சோதை வனப்பாரபிற் குற்றாலத்தெங்கூத்தனை நிழலார்சோலைநெடுங்களத்து நிலாயநித்தன்மணாளனை, அழலா வண்ணத்தம்மானை யன்பிலணைத்துவைத்தேனே,, —என்றும் வருமவற்றுள்ளுநுஞ் சிங்கத்தைக்கண்டு தானகூறினாபோலும். முத்தேயென்றும், பொன்னேயென்றும், ஞாயிறேயென்றும் இராஜசிங்கமேயென்றும், எழிலேறேயென்றும், அன்பினவ யப்பட்டுக்கூறும் மெய்யடியார் திறனறியாது முத்தாகவும், பொன்னாகவும், ஞாயிறாகவுமேகண்டு கூறினராகத் தடித்த டியாயப பொருள்கூறுவது பரமதடியாகூற்றாகலின் உமது அபசித்தாந்தம் பாழ்ந்தொழிந்ததெனக. இன்னும், சுந்த ரமூர்த்திசுவாமிகள் திருவாலங்காட்டுப் பதிகத்தில், "முத்தா முத்தித்தரவல்ல முகிழ்மென்முலையாளுமைபங்கா, சித்தாசித்தித்திறங்காட்டுஞ் சிவனேதேவாசிங்கமே, பத்தாபத்தாபலாபோற்றும் பரமாபழையனூராமேய, அத்தாவாலங்காடாவுன் னடியார்க்கடியேனாவேனே,,—என்றுவரும் வாக்கியத்தாலும் நுமதுகருத்துமறுக்கப்பட்டதெனக. நீதலத்திலுள்ளதாகக்காட்டிய பிம்பசாட்சியோவெனின், நும்மையொத்த விவேகபுஞ்சங களுக்கே அது ஒப்பாமன்றி உத்தமவிவேகிகள் மறந்துங்கொள்ளாரெனக. எங்ஙனமெனின், ஸ்ரீகாஞ்சியில் மூலட்டானரிடத்து,தேவியின் முலைத்தழும்பும், வளைத்தழும்பும் காணுமாபோல திருப்புகலூர் மூலட்டானரிடத்துங் காட்டல்வேண்டு. அங்ஙனங் காட்டாது யாரோவொருமூதேவிமசூலை சுற்றுப்பிராகாரத்தில் செய்யப்பட்டதாகக்கூறும் பிம்பமொன்றை அப்பாசுவாமிகளை விழுங்கிய கோலமென்று நீர்காட்டலந்தது கேவலம் மௌட்டியாந்தகாரமாயிற்றென்க.

இதுநிற்க, அத்தலபுராணமும் அங்ஙனமே கூறுகிறதென்றும், அதனை யாவருக்கும் விளங்கப்பேசுவேனென்றுஞ் சா

திக்கத்தலைப்பட்ட நுமது அறிவின்மாட்சியைச் சற்று விசாரிப்போம். இதனுள், யாவருக்கும் விளங்கப்பேசவேனென்றது சென்னையில் சபைகூடியகாலத்து, வீடுவீடாய்நுழைந்து சபைசேராதவண்ணஞ் செய்வதற்கு முயலும்படிச் சிலபிரபுக்களிடம் பேசிப்பேசி யழுதீரென்பதனால் நீரதில் வல்லவரென்பது எம்க்கு முடன்பாடேயாயிற்று. ஈதொழியவே, தலபுராணங்கூறுந்தகைமையைச் சற்றேபரியாலோசிப்போம். நீர் காட்டவந்த தலபுராணம் க்ஷேத்திர மாகாத்மியமன்றி அடியார் மாகாத்மியமன்று. அடியார் மாகாத்மியங்களாகிய பெரியபுராணம், திருத்தொண்டர் புராணசாரம், நம்பியாண்டார் நம்பிதிருவந்தாதி, சிவரஹஸ்யம், அகஸ்திய பக்தவிலாசம், உபமன்யு பக்தவிலாச முதலிய விசேஷப்பிரமாணங்கள் அப்பர்சுவாமிகள் முத்திவிஷயத்தில் ஒன்றிலொன்று முரணாது சரிவரக் கூறவும், சாமான்யமாகிய தலபுராணத்தில் முரணியதாகக் கற்பித்துக் கூறுவது பிரமாணமாகுமா? நீர் சென்னையில் வெளியிட்ட வழுவாசகப்பீறலில், இல்லாத தப்புப்பாட்டுக்களைப் பிரத்யட்சமாயக் கண்டதுபோல அச்சியாய்முட்டப்பட்டுக்காட்டி யாரோவொரு தம்பிரான் கண்டதென்று கற்பித்துரைத்ததுமன்றிப் பக்தவிலாசாதி கிரந்தங்களில் கண்டுணராத கலைசாரத் தமிழ்த்துவாமென்றுமொன்றுகாட்டி, அதற்குநீலகண்டசாஸ்திரியொருவரை ஆதரவாயத்தேடியழுது பாழ்த்தீரென்பது யாவருமறிவார்களே! சென்னையில் காட்டியகற்பிதபாகங்களும் அங்குதானே நாசமடைந்தனவாகவும், நீர் இப்புதுவையில் காட்டுவதாகப் புதுமைகாட்டுந்தலபுராணமும், அதிலுள்ளதாகக் கூறுஞ் சிங்கச்சேட்டையும் உமக்கு யாவர் கற்பித்துக் கொடுத்தனரோ அறியேம். "బహూనాం స్వల్పస్య బాధనమితి,,— "பஹூநாமல்பஸ்ய பாதநமிதி,, என்னும் நியாயசாத்திரத்தால் அநேகமாயுதகரிக்கும

பிரமாணங்களுக்குமுன் ஏகதேசபிரமாணம் பாதிக்கப்படும்
என்று பெறப்பட்டதனுல் கற்பனைவயத்ததாகிய தலபுராணத்
தாற்போந்த ஏகதேசபிரமாணம் அநேகமாகிய சிவரஹஸ்யம்,
பெரியபுராண முதலியவற்றோடு முரணி அப்பிரமாண்யத்வ
மாய்க்கண்டிக்கப்பட்டொழியும்.

இவ்வுண்மையைச் சென்னையில் ஸ்ரீ அருணாசலேசுவரர்ச
ந்நிதியையடுத்த கல்விமடத்திற்கூடியபெருஞ்சபையில்பிரமஹ
ஸ்ரீமஹாலிங்கசாஸ்திரிகள், ஸ்ரீநமச்சிவாயதேசிகர், மா-ா-ஸ்ரீ
புரசை அஷ்டாவதானம் சபாபதிமுதலியார், சோடசாவதானம்
சுப்பராயசெட்டியார், திருச்சிற்றம்பலப் பிள்ளையவர்கள், தணி
காசலமுதலியார், தியாகேசமுதலியார் முதலாகிய வித்வப் பிர
புக்களுக்கு முன்னிலையில் ம-ா-ா-ஸ்ரீ சூ. சபாபதிமுதலி
யார், சூ. சோமசுந்தரநாயகர் ஆகிய இருவர்களும் விவகரி
த்தகாலையில் பெரியபுராணம், சிவரஹஸ்யமுதலிய பலிஷ்டப்
பிரமாணங்களுக்கு முன்னர் தலபுராணத்தில் விரோதித்த அ
மிசங்கள் அப்பிரமாணமென்று தீர்மானிக்கப்பட்ட தன்றியும்
ம-ா-ா-ஸ்ரீ-பு. அ. சபாபதிமுதலியாரவர்கள் தாம் பாடங்கே
ட்டகாலத்து, தம்மாசாரியர்களாகிய ம-ா-ா-ஸ்ரீ வித்வான்
காஞ்சீபுரம் சபாபதிமுதலியார், கலீஜ் - தாண்டவராயமுதலி
யார் முதலாகிய பெரியோரிடத்தும் இந்தச் சிங்கப்பிரஸ்தாபங்
கேட்டதில்லையென்றும், சாமான்யர்களிப்படிச் சொல்லித்திரி
வதுண்டென்றுஞ் சொல்லிமுடித்தனரே! இன்னும், ஸ்ரீகை
லாச பரம்பரைத் திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீ சற்குருஸ்வா
மிகளுக்கு மஹாவித்வான், ஸ்ரீமீநாட்சிசுந்தரம்பிள்ளை யவர்க
ள் எழுதிவிடுத்த விண்ணப்பப்பத்திரமும், ஷை சந்நிதானத்தி
னின்றும் சென்னையில் ம-ா-ா-ஸ்ரீ காயாறு ஞானசுந்தரஐய

ரவர்களுக்கு வரவிடுத்த ஸ்ரீ முகபத்திரமும் வருமாறு சிந்தித்துய்வீராக.

சிவமயம.

## விண்ணப்பபத்திரம்.

"ஒப்புயர்விலலவன்சிவன்மூன்றுமமுடைமையாலிரண்டு
மொன்று மேறறா, தபபறந்தாழ்நதவொனறோந்தனந திரு
வாவடுதுறைநறறலததுள்வாாதம, வைபபணைய சுபபிரமணிய
குரவனெருபெயனா வகுததுளானா, யெபபடியும விலககலினை
மற்றவனறனறுமிலனென்றேயியமபுவோமே.

அடியேன் தெணடனிடடவிணணபபம.

அம்பரப்புராணம (சா) பாடலரஙகேற்றவேண்டியதிருககின்றது தினநதினம (சய) (கூய) பொழிடபாகச சொலலிககொண்டுவருகிறேனை. சரீரஸ்திதிபொதுவனகொனறகொமபுபோலிருககின்றது. இதறகாக இவ்விடம பிளளையவாகள ஒரு பரதேசியைககொணடு ஓாடசம முடித்துவருகிறாகள அது. (உ) (கூ) வேளைதான சாபபிடுவதாயிருக்கும. மகாசந்நிதானததினை கிருபையால அநுகூலபபடுமென்று நினைககிறேன. அபபாசுவாமிகள பெரியபுராணததிற சொல்லியிருககிற "மீணமுதலாமுலகேழுந மன்றுதிருநாானடகததிடட, புணணியாவுனனடிககே போதுகினறே னெனபபுகனறு நலலவரிய சிவாநதஞானவடிவேயாகி, யணணலாா சேவடிககீழானடவரசமாநதிருநதாா,, — பாடலபடியேயடைநதது சததியமே. அதற்குமேலாகச் சொலவதெலலாம அவவளவு நமபிககையலல. நலத்திற் சஙககாரியவாது எதிர்நூல் முங்கினதாகச்

சொல்வதுண்டு. அப்படி யநுட்டானமில்லை. இப்போதுநடத்தி வருகிறது சிவலிங்கத்திற் சேர்த்துவிடுகிறார்கள். அன்றியும் அப்பரும் லிங்கத்தயிக்கமானதொன்று முத்துத்தாண்டவரும் பாடியிருக்கிறார். புராணம் அடியேன்வரும்போதுகொண்டுவருகிறேன். புராணம் பிள்ளையவாளவரவழைத்துத் தருவித்தாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுதப்பி வேளாகுறிச்சி பண்டாரத்தைக்கொண்டு வரவழைக்கிறதாயிருந்தால்புராணமுண்டோவில்லையோவென்றும், சந்தேகமுடையவராக விருக்கிறார். ஒரு ஆள்வசத்தில் சந்நிதானநிவேதனத்திற்காக அகப்பட்ட முந்திரிப்பழம் அநுப்பியிருக்கிறேன்.

இங்ஙனம்,

யுவ௵ சித்திரைமீ ௫௧௨ } அடியேன் மீனாட்சிசுந்தரம்.

பழங்கொண்டுவரும் மனுஷன்சைவன்.

—*—

உ

சிவமயம்

# ஸ்ரீமுகபத்திரம்.

சுவாமி அம்பலவாணசுவாமி திருவுளத்தினாலே இகபரசௌபாக்கியவதானனிய மூர்த்தன்னிய சதுஷ்டயசாதாரண திக்குவிஜயபிரபு குலதிலகமங்கள குணகணாலங்கிருத வாசாலகபரிபாக சிரோரத்ந மகாபுருஷ செல்வசிரஞ்சீவி ஞானசர்தனாய ரவாக

மணிசோதனை, ஸ்திரீசோதனை செய்ததுபோலவே சிங்கசோதனையுஞ் செய்திருப்பாரெனின், அவற்றை விதந்துரைத்தது போலவே யிதனையுஞ் சேக்கிழார்சுவாமிகள் சொல்லியிருத்தல் வேண்டும். இஃது நடவாமையால் தமது செயவர்த்திருவாக்கில இவ்வசங்கதம் பெறப்பட்டதில்லை. நீர்காட்டிய சிங்கசோதனையை அங்கீகரிப்பினும் அதுமணியைப்போலும், ஸ்திரீயைப்போலுந் தனிச்சிங்கமாதல் வேண்டுமென்றிப் பெருமானிடத்துச் சிங்கமுகத்தால் சோதிக்கப்பட்டாரெனப்துகூடாது. பெருமானிடத்துச் சிங்கமுகங் காணபாரெனின், அது பெருமானது திருவிளையாட்டாக வழிபட்டு மகிழ்வரேயன்றி யொருக்காலும் அஞ்சார்! அஞ்சார்!! எமது பத்திரிகையில் "சிங்கவுருக்கொண்டு சோதிக்க,, என்று கூறினதால், முழுச்சிங்கமே யீண்டு கூறவந்ததென்பீராயின், பின்னர் இதற்கு முரணாகச் சிங்கமுக ஐக்கிய ஐதீகப்படமென்று கூறியதென்னை? இவ்விரண்டில் எது உண்மை? இதனைவிவகரிக்கில் ஒன்றும் உண்மையாகாவாம். எப்படியெனில், சிங்கவுருக்கொண்டது என்பதைத் தாபிக்கில் சிங்கமுகங்கொண்டது இல்லையாம். சிங்கமுகங்கொண்டது என்பதைத் தாபிக்கில் சிங்கவுருக்கொண்டது இல்லையாம். இப்படி ஒன்றோடொன்று மாறுகொண்டழியும் வண்ணம் மதிமயங்கிக்கூறிச் சிவபெருமான் சிங்கக்கோலங் கொண்டது பொய்யென்பதை நீரே விளக்கினீர். இப்பத்திரிகையின் மாத்திரமா? சென்னையில் நீர்செய்த அவலட்சணப்பிரசங்கத்தாலும், நீர்வெளியிட்ட விபரீத பத்திரிகையாலும் சிங்கமுகமாத்திரங் கொண்டுவந்ததாக வாதஞ்செய்து, இதுபோலவே சிங்கமுக சிவலிங்கப்படமொன்றெழுதிக் காட்டியதை மறைத்து, இப்புதுவையில்வந்து நாம் பத்துகாததூரத்துக்கு அப்புறமிருக்கும் சென்னையில்கூறியது இவ்விடத்தில் யாவருக்குத் தெரியப்போகிறதென்றெண்ணி, சிவபெருமான் முற்றுஞ்சிங்கவுருவ

மே கொண்டாரென்று பிரசங்கித்தும், முற்றுஞ் சிங்கவுருப்ப டமொன்றெழுதிக்காட்டியுந் தூவாதனஞ்செய்யத்தொடங்கியது உமது மனையையெழுததாய்முடிந்தது ஐயையோ! உம்முடைய புரட்டுமொழிகளையோசிக்குமிடத்துச் சைவசம்பிரதாயங்களை க்கெடுக்கவந்த புறச்சமயக் களவரென்றே வெளிப்படுகின்றீர். ஐயா கவிராயரே! நீர் உமது பத்திரிகையில், புதுவையில் தாபி க்கவந்த சிங்கவுருவத்தை மறந்து சென்னைஞாபகத்தால் சிங் கமுகமென்றுமதிமயங்கிக்கூறிய விசித்திரம், நினைக்குந்தோறும நகையையுண்டாக்கி, உம்மை அசத்தவாக்கியரென்றும், அசம்பி ரதாயரென்றும் வெளிப்படுத்திச் சிங்கமென்று பிரஸ்தாபிக்கு ந்தோறும் சீ! சீ!! என்று வெறுக்கவுஞ்செய்கின்றது. இந்த ஹேதுக்களால், தலபுராணம் தலபுராணம் என்று நீர் தலையி டித்துக்கொண்டழுவதை யின்றோடே தொலைத்துச் சுகித்திரு ப்பீராக.

இனியுமது பத்திரிகையிற்போந்த வழுவாசகங்களைச் ச ற்றுவிசாரிப்போம்.

உ

சிவமயம்.

# அப்பர்சுவாமிகள்

## முத்திநெறிவிளக்கம்

ம-ா-ா-ஸ்ரீ அ[illegible]ட்க.

சிவபெருமான் திருவருளை [illegible] சேக்கி ழார்சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய பெரியபுராண[illegible] த்திச்சுரர் கோயிலுக்குநோ- சட்டநாதசுவாமிகள் [illegible]

துள் அடியன் சொல்லிவருவதில் - திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்புகலூர் ஆலயத்துள் திருப்பணி செய்தருளக்கண்டகடவுள் மணிசோதனை ஸ்ரீசோதனைசெய்தபிறகு சிங்கவுருக்கொண்டு ஜோதிக்க அதுகண்டு, சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேனென்றோதிய- அப்பனார் யெடுத்துவிழுங்கி வெளியிட்டு மறைய தேவாரப்பாடலெட்டுங் கேட்டு ஐக்கியஞ்செய்துகொண்ட வுண்மைவிளங்க அறிஞர் அன்றே சிலைவடிவாறசெய்த நாட்டொட்டு இன்றும் அதனைப்பூசித்துவருவதும் அதனை அடுத்த மேற்சிலையிடத்தில் சிங்கமே எனனும் அப்பதிகப்பாடலொன்றை அன்றே தீட்டிவைத்திருக்கும் காட்சித் தலஐதிகப்பிரமாணமும் காணப்தனறி- அத்தலபுராணம் இருந்துழியுங் கண்டறிக.

இவ்விதியொன்றை- பெரியபுராணம்- உபமன்னியம்-அகத்தியம்- சிவரஹஸ்யம்- இதனுள் சொல்லாது விட்டது இறந்தது விலக்கலென்னும் உத்தி யெனக்கண்டறிந்து மேற்குறித்த மடாலயத்துள் சிங்கமுக ஐக்கிய ஐதிகப்படத்தை சபைநடுவே எழுந்தருளச்செய்து யாவருக்கும் விளங்கப்பேசும் சறசைவப் பிரசங்கத்திற்கு இதனடியிற் குறித்தநாளிரவில்-அ-மணிக்குத் தாங்களவந்திருந்து சிரவணஞ்செய்து பேரானந்தம அடையும்படி கோருகின்றனன்.

இங்ஙனம்,

யுவஹு } சற்சைவ சாம்பிரதாயங்களைத்
மார்கழிமீ உக உ } தழுவிப்பேசவல்லபுராணிகர்

பொ. சுந்தரப்பிள்ளை.

என்னுமிச்சிறியபத்திரிகையை நெடும்பொழுது யோசித்துயோசித்து அருமையாக முடித்தீர். இஃது, வழுக்களையெல்லாஞ்சோர்த்துத் திரட்டிய ஆபாச பத்திரிகையென்பதைச் சைவசம்பிரதாயங்களைத் தழுவிப்பேசவல்லேமென்றிறுமாந்திருக்கு நீர் நாணித்தலைகவிழுமாறு விளக்கிக்காட்டுவோம்.

உமது பத்திரிகைக்கு அப்பர்சுவாமிகள் முத்திநெறிவிளக்க மென்று பெயரிட்டீர். நீர் அறிவிக்கவந்த விஷயம் முத்தியாகவும், முத்திநெறியென்றது என்னை? முத்திநெறியென்பது முத்தியடைதற் கேதுவாகிய சரியைகிரியை யோக ஞானமென்னும் மார்க்கமாமே! அற்றன்று. நெறியென்பது, முறைமை ஆகலான் முத்தி அடைந்த முறைமையென்பொருள் கொள்கவெனின், அதுவுஞ் சமயமுறைமை, சாதிமுறைமை, நீதிமுறைமை என்பனபோல் சைவசமயத்தில் முத்தியடைந்தோர் யாவருக்கும் ஒத்த முறைமையாயிருத்தல் வேண்டும். அங்ஙனமின்றி நீர் கூறியது நூதனமுத்தி ஆகலானும், சிவபெருமான் திருவடியடைதலே உள்ள முறைமையாகலானும் பொருந்தாதென்க. ஆனால், நெறியென்பதற்கு விதமென்றும் பொருளிருத்தலின் முத்தியடைந்தவிதமென்று கொள்ளாமோவெனின், அங்ஙனமாயின், முத்தியை அடைந்தோர் யாவரும்வேறுவேறு விதமாக அடைந்திருக்கில் இது அப்பர்சுவாமிகள்முத்தியடைந்த விதமென்று கொள்ளலாம். திருவடியடைதலொன்றையே முத்தியெனக்கூறுஞ் சிவாகமத்துக்கிது மாறுபடுதலினிதுவும் பொருந்தாது. மற்றெவ்வாறு கூறல்வேண்டுமெனின், பொதுவகையால் முத்திவிளக்கமென்றே கூறல் வேண்டும் அப்படிக்கூறினால் யாங்கள் சொல்லவந்த சிறப்புவகை விளங்காதேயெனின், நூதன முத்திவிளக்கமென்று கூறும். இவ்வளவுகண்டு எழுதத்தெரியாத நீர் ஏனிதில் தலையிட்டுக்

கொண்டீர்? இவ்வூர்க்கல்விச்சாலையில்பயிலும்ஒருசிறுவனுக்குத்தெரிவிப்பீராயின், அவன் ஒருகுற்றமுமின்றி நொடிப்பொழுதிலமுடித்துக்கொடுப்பானே! அப்படியுஞ்செய்யாமற்போனீர். ஐயோபாவம்!

அல்லாஉம, திருநாவுக்கரசுசுவாமிகள் திருப்புகலூர்ஆலயத்துள் திருப்பணி செய்தருளக்கண்ட கடவுளெனனுந் தொடருள், திருப்பணிசெய்தருளக்கண்டகடவுளென்றதென்னை? ஆண்டவர் அடிமைகளுக்குச்செய்யுநன்மைகளை ஆண்டவர்செய்தருளினரென்று கூறுதலுண்மை. ஆண்டவருக்கு அடிமைகள் செய்யும்பணிகளைச் செய்தருளினரென்று அருட்பிரயோகத்தால் கூறவந்தது எங்குள்ள சம்பிரதாயம்? ஐயோ அவலட்சணமே! இதுகவிதாமமெனக.

ஏகண்டது பேசு என்னும் புலவரே! உமது புரட்டுகளை எவ்வளவென்றுதான் அளவிடுவோயப்பது? திருப்புகலூராலயத்தின் ஆவரணலிங்கத்திற சிவபெருமான் சிங்கமுகங்கொண்டு அப்பரை விழுங்கினரென்று சென்னையிற்கூறினீர் அதனையொளித்து, இவ்வூரில்விழுங்கியவுண்மை விளங்கஅறிஞரன்றே சிலையாற்செய்த சிங்கமொன்று அமைக்கப்பட்டிருக்கிறதென்று புலம்பியதென்னை? இன்னும், சிங்கமுகபிம்பம ஷை ஆலயத்தினோர்புறத்தில் பூசையின்றிக்கிடக்கிறதென்று சென்னையிற காட்டியதைமாற்றி இவ்விடத்தில் பூசைநடந்து வருகிறதென்று பொய்ச்சான்று கூறவந்ததென்னை? இவற்றால் நீர் சாதிக்கப்புகுந்த சித்தாந்தத்தின் ஆதிக்கம் வெளிப்பட்டது. எனவே, அஞ்ஞானதிமிரத்தெழுந்த ஞம தாயாசங்கிலப்பெற்றவாறு கிராஹ்யமாம்.

ஏ கேட்டதுபேசுஎன்னும் புலவரே! உமதுமந்தவாசகத்தில், தீட்டிவைத்திருக்கும் காட்சித்தல ஐதிகப்பிரமாணமும் என்றீரே! தீட்டிவைத்திருப்பதைக் காட்சிப்பிரமாணமாகக் கூறவந்த நீர் அதற்கு மாறாகத்தல ஐதிகமென்று அதனோடு சேர்த்துக்கூறியதென்னை? ஐதிகமாவது, இவ்வாலிற்பேயுண்டென்றியாவருஞ்சொல்லுகை. புறப்புறசமயிகளாகியமாயாவாதிகள் கூறும் அஷ்டவிதப்பிரமாணங்களிலொன்றாகிய ஐதிகம் உரையிலடங்கி,—காட்சி, அநுமானம், ஆகமம் என்னும் பிரமாணத்திரயமே சைவநூலார் கொண்டுவழங்குவதையறியாது, நீர் தனைப் பொருளமைதியின்றிக் கூறவந்தது குறியின்றிக் குருடன் கோலெறிந்ததுபோலும். இதனுண்மையைச் சிவாக்கிரயோகிகள் செய்தருளியசித்தியார்சுபக்ஷத்துரையானே தெளிந்துய்வீராக.

ஏ சிங்கப்பிரசங்கியாரே! இத்தோடே தொலையாமல் சிங்கமுகஐக்கிய ஐதிகப்படமென்றீரே! சிங்கமுக ஐக்கியத்தைச் சித்திரபிம்பங்கொண்டு காட்சியாகக் காட்டவந்தநீர் காட்சிப்படம் என்னாது ஐதிகப்படமென்று ஏன் மீண்டுமதனைக்கூறித் தொலைத்தீர்? இனியிவ்வைதிகப் பித்தை உம்மைப்பிடித்தாட்டுஞ் சிங்கபயித்தோடே சேர்த்துத் தொலைப்பீராக.

இனிஉமது வழுவாசகத்திற்போந்த இலக்கணப்புலமையைச் சற்றே விசாரி[redacted]

ஐயா [redacted] மேலெழுதிய உமது பத்திரிகையின் மு[redacted]பெருமா[redacted] என்றுதொடங்கிக் கண்ட[redacted]யை நோக்கின், இடை[redacted]தில், என்னும் தொழிலிடமாய்[redacted] வதைக்கொண்டுமுடிந்

தத்தோவறியேம். என்னை, 'எல்லையின்னும் மதுவும்பெயர்கொளுமல்லவினைகொளு நான்கேழிருமையும், புல்லும்பெரும்பாலுமென்மனார்புலவர்" என்னும் நன்னூற்பெயரியற்சூத்திரத்தாலவிளங்கவென்னும் வினையெச்சத்தைக்கொண்டுமுடிந்ததாகவும், இவ்விளங்கவென்னும்வினையெச்சம், காண்பதுஎன்னும்வினையின் பெயரைக்கொண்டுமுடிந்ததாகவுங்கொள்ளாயோவெனின், இக்காண்பதென்னும் வினையின்பெயர் சிலவடிவாற் செய்தலைப் பூசித்துவருங்காட்சியும், சிங்கமேயென்னும் பதிகத்தைத் தீட்டிவைத்திருக்குங்காட்சியுமென்னு மிவற்றைக்காட்டியதன்றி, 'சொல்லிவருவதில்விளங்க' என்பதன் கண்ணமைந்த சுரோத்திரானுபவத்தை விளக்கினதில்லை. ஆகலின், விளங்க வென்னும் வினையெச்சத்தின் பின்னர், கேட்டு என்று சுரோத்திரப்பிரயோசனத்தைக் காட்டல்வேண்டும் என்னை, காண்பது என்பது அறிவாற்காண்டலையுணர்தலின் அவனு மொக்குமெனக்குரங்குப்பிடியாற் சாதிப்பின், பூசித்து வருவதும், ஐதிகப்பிரமாணமும், என்பனபோல "விளங்க" என்பதன்கண்ணுமோ ரெண்ணும்மைகொடுத்தல் வேண்டும். அங்ஙனங் கொடுத்துழியும்பின் வருங்காட்சிப் பிரமாணத்துக்கொவ்வாமைதெளிக.

இன்னும் "மற்றையதேவாரப் பாடலெட்டுங்கேட்டு" என்னும் வினையெச்சத்தொடர்மொழியுள் பிறிதுப் பொருட்டாகிய மற்றையவென்னு மிடைச்சொல்லை யினைத்தென்றறிபொருளாகிய தேவாரப்பாடலெட்டென்பதனோடுசாத்தி யிதனிறுதிக்கண் முற்றும்மைகொடுத்துமுடித்தமைசவிஸ்தரத்தக்கப்பட்ட கடிமலர்த்தொங்கலைக்கவிக்கும். "இருநோக்கிவளுண்கணுள்ளதொருநோக்கு நோய்நோக்கொன்றந்நோய்மருந்து" என்னுந்திருவாக்குக்கிசைய் ஒரினமாகிய பலவற்றுள் சில

வற்றைவேறுபிரித்து முன்னரொருவாற்றாற்கூறிப்பின்னரொருவாற்றாலொழிந்தமையுங் கூறும்மவசரத்தனரோ மற்றையவென்னு மிடைச்சொற்பிரயோசன மிடம்பெறுப? அங்ஙனங்கூறாதுவிடுத்தமையானும், தேவாரப்பாடல் எடுமென்பதனைகணமுற்றும்மைகொடுத்து முடித்தமையானும், "வினைமாற்றசைநிலைபிறிதெனுமாறே", என்னுநன்னூலிடைச்சொலியற்சூத்திரத்தால்மற்று என்னு மிடைச்சொற்பொருண் மூன்றனுள் வினைமாற்றும் பிறிது மொழிய வதன்கணுள்ளதேனையசைச்சொற்பொருளொன்றேயாய் அப்பர்சுவாமிக ளருளிச்செய்த அப்பதிகத்தேவாரப்பாடல் எட்டோபத்தோவெனுமாசங்கைக்கிடம்பெற்று நும நறியாமை வெளிப்பட்டவாறுப. இவ்வசைநிலைப்பொருளுங் கருதியருபத்து வழங்காமைதெளியாதுகூறிய நுமமடமையிருந்தவாறு கொடிது! கொடிது!! எனனின், "சிங்கயேயுன்னடிக்கே போதுகின்றேன்", எனக்கூறியவாற்றால்வேறு பிரித்தமை யொக்குமெனின், அது ஓர்பாடலின் முதற்குறிப்பல்லாமையானும், இரண்டாவது பாடலிலுளளதாகலானும், அப்பதிகத்தின் முதற்பாடலும், இரண்டாவது பாடலின்முதன் மூன்றடியும், நான்காமடியின் பிற்பாதியுமகழித்து ஏனைச்சிங்கமே யுன்னடிக்கே போதுகின்றேனென்பதனுடன்மற்றை யெட்டுப்பாடலையுஞ்சேர்த்து ஓர்பதிகமெனப் பெயரிட்டவெவ்விலக்கணத்திற் கண்டவிதியோவறியேம. ஐயோ என்செய்வீர்பாவம்! "மற்றையதென்பது சுட்டியதற்கினம்", என்றும், "இனைத்தென்றறிபொருளுலகினில்லாப்பொருள் - வினைப்படுத்தொகுப்பினும்மைவேண்டும்", என்றுமவழங்குமிலக்கண விதிகளைக்கற்று வல்லுநர்பாலாய்ந்தறிவீராக.

அல்லதூஉம், "அறிஞரன்றே—காண்பதன்றி", என்னும் வாக்கியத்துள் அன்றேயென்னுஞ்சொல் என்னபொருளைத்தக்

தது? அன்றி, என்ன சொல்லைக்கருதிற்று? அந்நாளேயென்னும் பொருளைத் தருமாலோவெனின், பின்னுஞ் "செய்தநாட்டொட்டு,, என்று கூறுதலானும், அஃது நின்ற நிலைகளைத்தானப் பொருட்குப பொருத்தமின்மையானும, அதனகட்டநதநேறநேசாரத்துக்குப பயனின்மையானும அங்ஙனங் கொளவதமையாது. அசைசசொற்களாககொளளின், அவைசெய்யுள் வழககாமன்றி யிதுபோலபபொருத்த மினமையாய்பபரவைவழககாதலினமையின அதுவுமேலாது. வினைபொருளைத்தரு ம குறிபபுவினைசசொலலாகக கொணடாலோவெனின, அபபொருளமைநிககேறபச சிலசொறகளைபபிரயாசததோடு அவாவிசிற்றலான் அவவாறுதலும, ஏனைவேறு விதத்தாற பொருந்துதலுமரிதேயாயவிடடது. இதனால நீரதனை யொருபயனுநதராதவழி யெடுத்தாணடது அந்தகனகைபபடட அரதனமேபோலும.

இதுநிற்க, "சிலைவடிவாற்செய்த,, என்பதில்வடிவாலென்பதன் பொருளென்னை? கருவிபபொருளொனனின, கருவிபபொருளாவது வினைமுதற் றொழிறபயனைச்செயபபடு பொருட்கணுய்ப்பதாகலின் வினைமுதற் றொழிறபயனாகிய உருவந்தோன்று கையடைநத செயபபடு பொருளியாது? சிலையென்னின, சிலையெனபது செயப்படு பொருளோடொறறுமையுடைய முதறகருவியாகலின் காரணத்தைககாரியமாகக கொளளல் மாணயகருச் சகத்துமாதானமெனபது போலாம. அறறன்று, வடிவால் என்பதே செயபபடுபொருளெனின, முன்னா அது கருவிபபொருளையுணாத்திறறெனறும, பின்னா செயபடுபொருளை யுணாத்திறறென்றும முரணி "ஒன்றுருவதனுருபாலொடொடு, கருவிகருத்தாவுட னிகழ்வதனபொருள,,

என்னுஞ் சூத்திரக்கருத்தவலப்பட்டொழிய நம்மடமையைக் காட்டியவாறும். இங்ஙனங்கூறியவாற்றால் செயப்படுபொருளை யுணர்த்தாத ஆல உருபைக்கருவிப்பொருளுணர்த்துமாறுசிலே யெனப்பதனகண்சேரப்படுதே முறைமையாம. ஆல் உருபிவ்வா றொழிதலால வடிவென்பதேசெயப்படுபொருளென்னின், அது வும் பானையாகியவடிவோ, சட்டியாகியவடிவோ என்று மிகழ் ச்சிக்கேது வாககலானும, அஃது நின்றநிலைக்களத்தான்வேறு பொருள்குறித்து விபரீதததைப்பயத்தலானும் பயனறியாது உருபைப்பெயர்ப்பாற்படுத்து வேற்றுமை செய்தநும்புலமையி ருநதவாறு புனமையேயாம்.

மேலிரண்டாம்பாகத்தில், "இவ்விதியைப் பெரியபுரா ணம், உபமன்னியம, அகத்தியம, சிவரஹஸ்யம, இதனுள் சொல்லாது விட்டது "இறந்தது விலககலென்னுமுத்தி,, என் று அழுவாத இலககணப்புலவரே! இறநதது விலககலென்ப து முறகாலதது வழங்கியவிலககணங்களுள் பிறகாலத்து வ ழங்காமற்போனதை நீக்கலென்பதேயாம. எஙஙனமெனின, "ஞனவெனபுள்ளி முன்யாவு ஞாவும, வினையோரனைய வென் மனுர்புலவர்,,— என்னுஞ சூத்திரத்தால் ஞகாரனகாரவீற்றி ன்முன்யகரமுதல் வினைச்சொல் லொன்றேவரின், அவண் யகரத்துக்கு ஞகரமொகுமென வாசிரியர்தொல்காப்பியருரை த்தவாறே "மண்ஞாத்தகோட்டமழகளிறுதோன்றுமே,, என் றும்"பொன்ஞாத்ததார்ப்புரவிபரிகருமே,, என்றுமவருமவற்றி னமைந்தமண்ஞாத்தபொன்ஞாத்தவென்னுமிமமொழியிடைப போலிகள் அக்காலத்துவழங்கிப பிற்காலதது வழங்கிவராமை நோக்கித் தொலகாப்பியத்துககு வழிநூல் செய்யப்போந்தந னனூலார், "செய்ஞ்ஞின்றநீலமலாகின்றதிலலைசசிற்றம்பலவ ன்", மைஞ்ஞின்றவொண்கணமலைமகளகணடு மகிழ்நதிறக

நெய்தனின்றெரியும் விளக்கொத்த நீலமணிமிடற்றான், கை ஞந்னைறவாடலகண்டாற்பின்னைக் கணகொண்டு காண்பதெ ஞானே,,— என்றருளிய அப்பர்சுவாமிகள் திருவாக்கால மைந்த செய்ஞ்ஞின்றா, மைஞ்ஞின்ற, என்னு மிம்மொழியி டைபோலிசளொருவாறற்ற சிலாகசொப்பமுடிதலினிவற றை "ஞானயவழி நவவொடுசெலவழி, ஞஃகானு றமுமெ ன றருமுளரே,, என்னுஞ் சூத்திரத்தில பிறன்கோட்கூற லென்னு முத்தியாற றழுவிக்கூறி, அவற்றையொன்றினமு டிந்தவாறின முடிந்தலென்னு முத்தியானுந்தழுவாது இ றந்தது விலக்கலென்னு முத்தியினாலேயே அற்வேகூறுதுவி டுத்தார். இவவுணமையையறியாது அடியார் மாந்தியங்களை யுணாசதூநெ சிவரஹஸ்யமுதலானவற்றுள மேலெவிதியை நீ ரெடுத்தாளவநதது நுமதபாண்டித்ய பிரகடநமேயாம்.

இவ்விசாரதரால் யாதாமொருநூலிற் கூறியதோர்விதியை அநுவழங்காமை நோககிபபினனர் வழிநூலார் விலக்கி விடுதலை இறநதது விலக்கலென்னுமுத்தியினபொருளுமபிரயோசனமுமாக வெளிப்படடதனால், நீர்காட்டிய மேலுத்தி நுமது சிஙகதாபனததுககிடம பெறாதாயிறறு. எஙஙனமெனின, சிவபெருமான் உமாதேவியாருககுச சிவரஹஸ்யத்தைக கூறுவதனமுனனா சுவாமி சிங்கமாகவநது அபபரைவிழுங்கிஞரெனறு எநதநூலிறகூறபபடடுளளது? யாதாமொருநூலிற கூறபபடடதெனபீராயின், அதுசிவரஹஸ்யத்தில விடபபட்டமையால் யாதாமொருநூலெனபதும இறந்ததுவிலககலெனனுமுததியால்கழிககபபடுமே! இஙஙனமாகவும, மீணடுமதனை நீரெடுத்தாளவந்த தெனனபேதமை? இறநதுவிலககலென்னுமுத்தியால் சிவரஹஸ்யமாதிகளில்விலககியசிங்கத்தை நீர்கூறவநதது வேறெநதயுத்தியாதாரவைக்கொணடு? இறநததுதழுவ

லென்னு முத்தியென்று கூறுவீரபோலும். ஐயோபாவமே! இனியொருபுதுஇலக்கணமாவது கறபித்து, அதிலிவ்வரியவிதியை நுழைபபீராயின் உமதுசிததாநதம நிலைகரும்! நிலைகரும!! இதனால சிவராஹஸ்யததுககு முன்னெருநூலுணடெனபதும, இறந்தது விலககலென்னு முததியால சிவராஹஸ்யமாதிகளில்சிங்கமவிடபபட்டதென்பதும நுமதறியாமையைககாட்டும பேய்ககூசசலாயிற்று.

இதுநிற்க, உபமன்னியம, அகத்தியம் என்று நீர் காட்டியநூல்களயாவை? உபமனனியா செய்தநூல உபமன்னியமெனறும், அகததியா செய்தநூல அகததியமென்றுங் கொணடுமயங்கிககூறினீர். இம்முனிவாகள அடியார்கள் சரிததிரத்தை மஹரிஷிகளுககுணாததிய வுண்மையை இவாகள்பெயரால உபமனயுபகதவிலாசம, அகஸதியபக்தவிலாசம என றுஸ்காநதத்திறகு உபபுராணங்களாக வியாசாசெயதாரென்பதையறியாது இவாகளையே நூலாசிரியாகளாகவெணணி உபமன்னியம, அகததியம் என்று நீா பேரிட்டழைத்தவாறு என்ன கொடுமை? அகததியமெனபது அகததியராறசெய்தவோரிலக்கணநூலென்பதனையுமறியாது, அதனுமா சிஙகந்துக கிடநதேடி யலுத்துசகழிததீரே! பாவம! பாவம!! இமமட்டோ, பெரியபுராணம, உபமனனியம், அகததியம, சிவாஹஸ்யம என்னுமெணணலுமமைதரொகைபனமைபபொருட்நது நிறறலினிவறறைச சுட்டிடைபபடுததியுணாததும போதுஇவற்றுளெனப்பலவின்பாறபடுததுணாததவிதியாகவும, இதனுளெனவொன்றன்பாறபடுததுணாத்தியதெவ்விதிநோக்கியோ அறியேம. ஒருமை பன்மையயககறியாதுழலுமூமரே! உமதிலககணபபுலமையினைமைந்தபுத்திநுட்பமஉலககைககொழுநதெனபது திண்ணம! திண்ணம!! "விஞசசுட்டுடனும வேறுமாம்பொரு, ளாதி

யுறுதுச்சுட்டிணையாய்த, வொன்றனெண்ணின்னளவொன்ற
ன்பெயரே,, என்றும், "முன்னரவவொடுவருவைவயவ்வுஞ்சுட
டிறு வவ்வுஙகள ளிறுமொழியு, மொன்றலெண ஞுமுளளவி
ல்ல, பலல சில்ல வுளவிலபலசில,வின்னவுமபலவின்பெயராகு
மமே,, என்றுமவருமிந் நன னூற் பெயரியநசூத்திரஙகளேயினி
யாவது பாடஙகேட்டுத் தெளிவீராக.

இன்னனபலவாய் நிரமபிக்கிடக்குங்குற்றங்களேயாராய
படுகின, உமதுபத்திரிகையினறபாக முந்தோராது கணடிககப
பட்டொழியுமெனஅஞ்சி யிவவளவில் விடுத்தனம். சிஙகவசங்
கதத்தை மறுககத் தொடங்கியயாமஉமதிலக்கணபபுலமையை
யீணடு விரித்துக்காட்டிய தென்னேயெனின, நீர் கூறவநத சி
ஙகதாபனததுககு இறநதது விலககலெனறு முத்தியொன்
றைககாட்டி நுமதிலககண பாண்டித்யப பிரகடனஞ்செயயத்
தொடஙகினமையின் அதிலுமக்குளள விசாரமிவவகைத் தெ
ன்றியாவருமறிந்து மயங்காவணணமேயாம்.

இனிச சைவசம்பிரதாயங்களைத் தழுவிப பேசவல்லே
னெனறுவெளிபபட்ட நுமதுபுலலறிவாணமையைச சற்றுவெ
ளிபபடுததுவோம.சைவசமபிரதாயங்களைபபேசவல்லவா என
பதில்பேசவலலவாஎன்பது,வெளிப்படையாலபிறருககுசசொ
ல்லவல்லவாஎன்று பொருள்தநது குறிபபாலஅநுட்டிககவலல
வரல்லாஎன்பதையுணர்த்திகின்றது. தழுவிஎன்பது, வெளிபபு
டையால் சீவஞாத்தமாய்ப பிறருக்குச செல்லுதறபொருட்டுபெ
பிறாசோளாகிய ் சைவத்தைத்தழுவுகின்றவரென்றுபொருள
தநது குறிப்பால் அனனியசமயியென்பதனையும, சிவதீட்சாவி
சிட்டத்தால சைவாசாரத்தை யடையாதவரென்பதனையு முண
ர்த்திகின்றது. இவ்வாறு விபரீதத்தைபபயபபதாகிய அவ்வா

இக்கப்பட்டப்பெயரை நுமக்களித்தவரியாவர்? ஐயோகலிமாட்சியே! சிவனடியார்க் கேவல்பூண்டொழுகும் இன்னுன்என்று திரிந்து காலங்கழிக்கக்கூடாதா? சிவபுண்ணியங்கிட்டுமே! புகழைவிரும்பிபுண்பட்டிழிந்தபுலவரே! இனியாவது அடங்கிவாழ்வீராக.

இம்மட்டேதொலேயாமல் "புராணிகர்,,என்னும்பெயரையுமதுசொந்தமாக ஆண்டுவருகின்றீரே! நீர்புராணிகர்பட்டம் பெறறதுபோதும போதுமென்று சொல்லுமபடி "அசம்பிரதாயநிரசனம் "அஞ்ஞாநதிமிரபாஸகரம்,, என்னு நூல்களிலசைவப்பிரகாச சமாஜீயா வட்டித்திருப்பதுபோதாமல் இன்னும் விருமபுகின றீரபோலும. சென்னையில் ஷ சமாஜத்தலைவரில்லாத சமயம்பாரத்து நீர ஏகதேசமாயசசோததசபையில் வெளியிடட வழுவாசகதிமிரததில ஓதுகின்றவர் ஓதுவார், அவதானஞ்செயபவர் அவதானிஎன்று வருமாபோல் புராணஞ்சொலபவா புராணிகரென்றுவருவதாய் நீர்காட்டிய நியாயஙகள ஷ சமாஜத்தா வெளியிட்டபாஸகரததில் தேய்நதொழிநதனவாகவும், ஒன்றும அறியாதவாபோல்நீரதனை மீணடுமீணடும விடாதுபறறிவருவது என்னமதிமயக்கமோ அறியேம.பிரமோத்தரகண்டததில்; "இனனதேயருந்திபபிரதோடமென்ன யாமவழுத்துதற்கெளிதோ, அன்னவாகனனும் கலுழவாகனனு மறிவதன றதனுடைபபெருமை, பன்னகாபரணனபூசையினிதுபோற பலநதரும் பூசையின்றென்று,முன்னை நூன முழுது முணாநதவனமொழிந்தான் முனிவரரனைவருமகிழ்நதாா,, எனனும்வாககியத்தில் "முன்னை நூன்முழுதுமுணர்ந்தவன,, என்று சூதமுனிவரை முற்றுணர்ச்சியுடையாராககூறி "முனிவரரனைவருமகிழ்ந்தாா,, என்று

அவரிடத்துப் புராணங்கேட்குமதிகாரிகளாக நைமிசவனமு னிவாகளை விதந்துரைக்கப்பட்டது.ஈதிங்ஙனமாகவும், உம்மு டையபுத்திதெளிவும், கல்விநுட்பமும, புராணத்தேர்ச்சியும் வெட்டவெளியென்பதுயாவருமறிவார்களே! "பிஞ்ஞகன்,,என ுரல் மயிலிறகைச்சூடினவனென்றும்,அதுதபபிபிரதிக்ஞையு டையவனெனறுமபிரசங்கித்து,கஙகையெனருல்;—கம்சலமா னது,கை-கையிடததது என்று தாதுஉறபத்தியுடன்உமாதேவி யாா கையிலேசலமபிறந்தமையால் வந்தபெயராகுமென்றுகம என்னுமவடசொலலையும,கையென்னுந தமிழ்ச்சொல்லையும்பு ணாத்திப்பொருளறியாதுபுலம்பியும்வரும வழககுடையீரென டது அனுபவசித்தமாமே! இன்னும்,திருவிளையாடறபுராணம, மாமனுகவநது வழககுரைததபடலத்தில் "ஒருததிநாஞெருத்தி க்கிநதவொருமகனிவனுந்தேறுங, கருத்திலாசசிறியன்,,என்று வருவதில்"ஒருத்திநான்,, எனறமையால தனபதிசெட்டியாரு டையதங்கைபுருஷனிழந்தகைப்பெணணென்றும்,"மாதுலரா கியந்தோா மருகனைத்தமபின்வந்த, தாதுலராதகோதை தன் ஞெடுங்தழீஇ,,என்று வருவதில் "தாதுலராதகோதை,, என்ற மையால் இளஙகைம்பெண்ணென்றும்விபரீதபபொருள்கூறிப புராணமுழுதும்பபடியே அபாததஙகளால் பிரசஙகித்துத்தி ரிகின்றீரெனபதும பிரத்தியட்சமாமே! இபபடிப்பட்டஅவல டசணத்தைப பரமாபதவாக்கியமாகத் தெளிவின்றிகேட்டும கிழுமதிகாரிகள தாமமுமிதனுனே வெளிபபடடதனுல சூதமு னிவர்க்குரிய புராணிகாஎனனுமபெயரா யுரிமையாகவேகருதி நீர்வகிப்பதும,உம்முடையமாணுககாகளஅந்தபபடடபபெயரா லஉம்மை அருமைபாராட்டியழைபபதும்குருபன்னியைக் குரு வியென்றழைகக நியாயங்கற்றமூடர் கூற்றிலெணணப்படு மென்க. "சிதமதியபிளளை வெளளையமுதஙகாலுஞ் செஞ்ச டைமைக்கருமிடற்றுப பசியசாயன், மாதுவளரொருபுறத்து

கீறுபூத்த மாணிக்கமலையனைய வருணமேனி, நாதனது சரித்திரத்தின்மேன்மையின்னு நவில்வனெனத் தவமுனிவரெவருங் கேட்பச், சூதனெனும்புராணமுனி மறைகளனைத்துஞ்சொன்னமுனியடிதொழுது பினனுஞ்சொன்னான்,, என்னுமவாக்கியத்தில், "சூதனெனும் புராணமுனி,, என்று வந்ததைநோக்கில் சூதாஎன்பதும, புராணிகர்என்பது மொருவரையேகுறித்துநின்றது. இது சிவனென்னுமுமைகேள்வனென்பதுபோலாம. சிவனென்றாலும், உமைகேளவனென்றாலும் மொருவரையேபற்றி யெபபடியன்யத்ரா இடம்பெற்றதில்லையோ அபபடியே "சூதரென்றாலும், புராணமுனிவரென்றாலு மொருவரையேபற்றி யன்யத்ராஇடமபெற்றதில்லை. "மறைகளனைத்துஞ் சொன்னமுனியடிதொழுது" என்பதில்மறைகளனைத்துஞ்சொனனமுனியென்பது வேதமுனியெனறுபொருள்தந்து புராணமுனியாகிய சூதாவேதமுனியாகிய வியாசரை வணங்கியென்றுபொருளகருதுமாறுவெளிபபடும். ஈணடுவியாசரெனும்வேதமுனியென்றதுவேதமுனியென்னும்பொருளைத்தரும மறைகளனைத்துஞ்சொனனமுனியென்றமாத்திரத்தானேயெப்படிவியாதமுனிவ ரொருவரையேபறறி யன்யத்ரா இடம்பெற்றதில்லையோ அபபடியே புராணமுனியென்றுயாண்டு யாண்டு யாராவாய்ப்பட்டுவரினும்சூதமுனிவ ரொருவரையேபறறியன்யத்ராஇடம்பெறுமாறுபாதிக்கபபடும. இவ்விசாரத்தால் வேதங்களைவிளக்கினவா வியாசரென்றும்,புராணங்களைவிளக்கினவாசூதரென்றும்பெறப்பட்டு,வேதவியாசா-சூதபுராணிகர்என்றுவழங்கிவருமாற்றால்அரசன்மணிமுடியை யம்பட்டனொருத்தன்கவர்ந்து தன்னதாகப்பாவித்து மகிழ்வதுபோல் யாம்புராணிகர் யாம் புராணிகர்என்று லஜ்ஜைகெட்டுத்திரியு முமதுசங்கத்தைவெறுத்து இனியாவது பிழைக்கும் வழிதேடுவீராக.

ஏ அசந்சைவரே! யாமிதுகாறும் விவகரித்துவந்த நியாயங்களால உமது சிங்ககூச்சலுக்கு இனியிபபுதுவை யிடந்தராதென்பதையுணர்ந்து எந்தத்தெருத்திண்ணையிலாவது இடந்தேடிக்கொண்டு சீவனமடக்கவேண்டிய முக்கியவிருத்தியைநாடி உமக்குக்கைவந்த எநதபுராணத்தையாவது உள்ளவாறு பிரசஙகித்துக்கொண்டு காலங்கழிப்பீராக. இதனைவிட்டு யாம பேசவல்லேமெனறும, யாம விளங்கபபேசுஞ்சபைக்குயாவரும வரவேண்டுமென்றும் வீணடமபத்தால் வெளிபபட்டு ஏன அவமதிப்புணடாழிகின்றீர்? இதனால நீ ரடையும்பயன்யாது? சென்னைககல்விமடத்தில் சபைசேருகிறதினத்தில அச்சபைசேராதவணணந்தடுபபதறகு நும்மனோபெயரால நீர வெளிபபடுத்திய ஆபாசபத்திரிகைக்குப பதில்அச்சிட்டு வெளிப்படுத்த அவகாசமில்லாமையால ஷை சமாஜீயா உடனே கையெழுத்துபபத்திரிகையாய் நும்மனோர்க கனுபபிவிடடுச சபைசேர்நத அனறுமாலையில யாவருமறியும்பொருட்டு வாசித்துக்காட்டிய பத்திரிகையொன்றீண்டு வரைநதுவிடுமாறுகணடுநாணுவீராக.

௨

சிவமயம்.

ஸ்ரீ ஞானசம்பந்தகுரவே நம:

---

கோ-திருத்தொண்டர் சபையைச்சேர்ந்த சி-வெங்கடாசலமுதலியார். கோ-னே-கன்னியப்பாசாரி. சே-உருத்திரபபாசாரியாகிய மூவருக்குமறிவிப்பது.

சென்றமீ-ருய-உயில்கல்விமடத்தில் நாங்கள்சேருஞ்சபைக்கு அசம்பிரதாயங்களைப்பேசவல்ல பொ-சுந்தரப்பிள்ளையை வரும்படி நேரே அவருககுப் பத்திரிகைமூலமாய்த் தெரி

வித்தராகு அவரைமறைத்து நீங்கள் வெளிப்பட்டது ஆச்சரியம்! ஆச்சரியம்!!

மேற்குறித்த சபைசேருவது இன்றையதினமென்று நீங்களறிந்திருந்தும் அறியாதவர்போல் இன்றைக்கு எங்களுக்குப் பத்திரிகையெழுதிவிடுத்தது உங்களுயிர்த்தப்பியோட வழிதேடினவராகக் காணப்படுகிறது.

ஷ பத்திரிகையிலுள்ள விஷயமாக நீங்களிப்போது குறித்தவைப்பாடுகளெல்லாம் நாங்கள் முன்னமேயே கேட்டுப்பத்தில பெருமையால் நிஸ்புருஷமாகக் கழித்துவிட்டதானபடியால் மீண்டும் அவ்விஷயத்தைப்பற்றி உங்களுக்கு உத்தரமெழுதவேண்டுதற்கு அவசியமன்று.

நாங்கள் இன்றைக்குச் சபைசேருகிற விஷயத்தில் உங்கள் பிரசங்கியார்க்கு இரண்டு பத்திரிகையெழுதிவிடுத்தமைக்குப் பதிலுரைக்கவேண்டியவராயிருக்க நீங்களெழுதிவிடுத்தது எதுக்கோவறியேம்.

சதுச்சாஸ்திர பண்டிதராகிய பிரம்ஹஸ்ரீ தி-மஹாலிங்கசாஸ்திரிகள், சைவசம்பிரதாயங்களை நன்குணர்ந்த மு-ரா-ஸ்ரீ புரசை, அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரவர்கள் முதலிய பெரியோர்களின்று சபைசேருவராகையால் அப்பெருஞ்சபையில் உங்கள்பிரசங்கியார் நேரேவந்து அவர்களுக்கு முன்பாகத் தமது சித்தாந்தத்தை நிலைநாட்டிக்கொள்ளும்படி நீங்களவர்க்கு அறிவிப்பதே உங்களுக்குப் பெரும்பிரயோசனமாம்.

இங்ஙனம்,

யுவ வருஷம்- சித்திரைமீ-கவ

சற்சம்பிரதாய சீலாகருத் தொண்டுபூண்டொழுகும்

திருவல்லிக்கேணி சைவப்பிரகாச சமாஜீயர்களாகிய

நல்-சுப்பிரமணியமுதலியார்

மீ-பொன்னம்பலஉபாத்தியாயர்.

என்னுமிப்பத்திரிகைச்சான்றோனே நீர் யாவருக்கும் விளங்கப்பேசவல்லீரென்பது வெட்டவெளியானதால் உம்மை யாம் வலிந்தெதிர்த்து வாதசபைக்கழைப்பது கூடாமையாயிருக்கின்றது. உமது பேராற்றலைக்காட்டவேண்டி நீர் சபைசேர்த்து அங்கு எம்மைவரிப்பின் யாமும், எம்மவர்களும் வருதற்குப்பின்னிடையேம்! பின்னிடையேம்!! இன்னும், திருவல்லிக்கேணி சமாஜத்து அடியவர் திருக்கூட்டத்தவர்களையும் இங்கு வரும்படிக்கேட்டுக்கொள்ளுகிறோம். இங்குநின்றுபேசும்! பேசும்!!வாதசபையென்பது நீர் காட்டித்திரியுஞ்சித்திரப்படமல்லவே!கல்விகேள்விகளில் சிரமபியவிவேகிகள்பலர்கூடப்பெறுங்கழகமாமே! அங்கே நும்மதுஜபமௌனசாயுமோ? படிப்பாளிகளல்லாதசாமான்யர்களைவஞ்சித்துச் சண்டப்பிரசண்டமாய்ப்பிரசங்கித்து மகிழ்கின்றபுலவரே! உமதுவீணசெருக்கைமாற்றிப்பழிபாவங்களுக்கஞ்சிப் பெரியபுராணத்திலுள்ளவாறு பிரசங்கித்து வருவீராயின் உம்மையாவரும் விரும்புவார்களே! யாமும் அங்குவந்துகேட்டு மகிழ்வதில்யாதொரு தடையுமிராதே கற்றுணர்ந்தவராயினும், கல்லாதவராயினும் சிவநாமங்களை அன்போடு சொல்லுவாராயின், எத்திறத்துமேலோர்களும் விரும்பிக்கேட்பதுகடனுமே! இவ்வுண்மைகளைத்தெளிந்துஇனி யாவதிப்படிப்பட்ட விபரீதங்களின் முயலாது சிங்கம் சிங்கம் என்று இரவும்பகலும் பித்தந்தலைக்கேறிப்பிதற்றித்திரிவதை விட்டுச் சுகித்திருப்பீராக.

ஸ்ரீவாகீசகுருசரணாரவிந்தார்ப்பணமஸ்து.

திருச்சிற்றம்பலம்